IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.858 /2009
Deposition of witness for PW1

Name : பாஸ்கரன்

Father Name : ஆறுமுகம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 31 day of January, 2023.

குறுக்கு விசாரணை

1. ஆறுமுக வகையறாவின் வாரிசுகள் நாங்கள் என்றால் சரிதான். எங்கள் தகப்பனார் ஆறுமுகத்திற்கு பாகப்பிரிவினையின் அடிப்படையில் தான் இவ்வழக்கு சொத்து கிடைக்கப்பெற்றது என்றால சரிதான். ஆறுமுகத்திற்கும், வினாயகத்திற்கும்இடையே தான் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால சரிதான். வினாயகம் அவரது சுயசம்பாதியத்தின் மூலம் வாங்கப்பட்ட சொத்து தான் வழக்கு சொத்து என்றால், கூட்டுக்குடும்பமாக இருந்தபோது வினாயதம் பெயரில் வாங்கப்பட்டது.

2. வினாயகம் செல்வராஜ் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அப்துல்லா பாஷாவிடமிருந்து செல்வராஜ் கிரையம் பெற்றிருந்தார் என்றால் சரிதான். அப்துல்லா பாஷாவிடமிருந்து செல்வராஜ் கிரையம் பெற்றதும், செல்வராஜ் இடமிருந்து வினாயகம் கிரையம் பெற்றதும் ஒரே நாளில் என்றால் சரிதான். அது தான் இவ்வழக்கில் வா.சா.ஆ1 மற்றும் வா.சா.ஆ2 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ1-ல் அப்துல்லா பாஷா இடமிருந்து செல்வராஜ் கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. அதே ஆவணத்தில் 4ம் பக்கத்தில் அசல் வழக்கு எண்.99/1953 என்ற வழக்கில் அவருக்கு பாகம் கிடைக்கப்பெற்றதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அவருக்கு அவ்வாறு பாகம் கிடைக்கப்பெற்றதற்கான ஆதாரங்களை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அப்துல்லாபாஷாவிற்கு ஒதுக்கப்படாத பாகசொத்தை செல்வராஜ்க்கு

விற்பனை செய்துள்ளார் என்றால் சாட்சி கேள்விக்கு அமைதியாக இருந்தும் நீதிமன்றம் பதில் கூற கேட்டுக்கொண்டதற்கு பிறகும் சாட்சி பதில் அளிக்கவில்லை.

4. மேற்படி அசல் வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அப்துல்லாபாஷாவிற்கு பாக உரிமை இல்லாத சொத்தை அவர் செல்வராஜுவிற்கு விற்றதும் தவறு என்றும் செல்வராஜ் வாங்கியதும் தவறு என்றும் அதன் பின்பு செல்வராஜ் வினாயத்திற்கு விற்றதும் தவறு என்றும் அப்துல்லாபாஷாவிற்கே சொத்தை விற்க உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அப்துல்லாபாஷாவிடமிருந்து செல்வராஜ், செல்வராஜுவிடமிருந்து வினாயகம் மற்றும் வினாயகமோ சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்தார்கள் என்பதற்கு வருவாய் ஆவணங்கள் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. வழக்கு சொத்தின் முந்தைய உரிமையாளர்களும் தற்போதைய உரிமை கோரும் நபர்கள் எவருமே வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருந்ததேயில்லை என்றால் சரியல்ல. அப்துல்லாபாஷா செல்வராஜுவிற்கு கடந்த 1967ம் ஆண்டில் தான் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதுநாள் முதல் இன்றைய தேதிவரை இவ்வழக்கு சொத்திற்கு உரிய சுவாதீனத்தை காட்டக்கூடிய வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் நாங்களும், எங்கள் முந்தைய உரிமையாளர்களும் சுவாதீனத்திலேயே இருந்தது கிடையாது என்றால் சரியல்ல நாங்கள் தான் உரிமையாளர்கள்.

6. எனது முதல்விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 3-ல் அகமதுனிஷா தவறுதலாக பொய்யாக அப்துல்லாபாஷாவின் வாரிசாக உரிமை கோருவது அப்துல்லாபாஷாவே விற்றுவிட்டதால் செல்லாது என்று நான் குறிப்பிட்டுள்ள நிலையில் எங்கு, எப்பொழுது மேற்படி அகமதுனிஷா அப்துல்லாபாஷாவின் வாரிசாக உரிமை கோரினார் என்று கூறு இயலுமா என்றால் வழக்கறிஞரை கேட்டுத்தான் என்னால் கூறஇயலும் என்று சாட்சி கூறுகிறார். எனது

முதல்விசாரணை பிரமாணவாக்குமூலம் எனது வழக்கறிஞர் தான் தயார் செய்தார் என்றாலும், நான் கூறி தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் கூறி தான் தயார் செய்யப்பட்டது.

7. மேற்படி பத்தி 3 பிரமாணவாக்குமூலத்தில் 7 முதல் 10 வரிகளில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் இவ்வழக்கின் பிரதிவாதி எதிர் வழக்குரையிலோ அல்லது அசல் வழக்கு எண். 909/2009-ன் வழக்குரையிலோ எங்கு சொல்லியுள்ளார் என்றால் சாட்சி கேள்வியை நன்கு புரிந்து கொண்டு மௌனமாகவே இருந்து பதில் அளிக்க மறுக்கிறார். இவ்வழக்கில் நாங்கள் என்ன பரிகாரம் கோரி வழக்கிட்டுள்ளோம் என்றால் வழக்கு சொத்தின் முழுஉரிமையாளர்கள் நாங்கள் தான் விளம்புகை செய்யக்கோரி வழக்கிட்டுள்ளோம். வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தான் விளம்புகை பரிகாரம் இவ்வழக்கில் கோரியுள்ளோம் என்றால் சரிதான்.

8. அப்துல்லாபாஷாவிற்கே உரிமையில்லாத சொத்தை செல்வராஜுவிற்கு விற்றதின் அடிப்படையில் வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் வராது என்றால் சரியல்ல. மேற்படி அசல்வழக்கு எண்.99/1953-ன் படி அப்துல்லாபாஷாவிற்கு உரிமை வந்துள்ளதாக வா.சா.ஆ1-ல் குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை நிரூபிக்க ஏதேனும் ஆதாரங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேமா என்றால் இல்லை. இவ்வழக்கில் எந்த முகாந்திரமும் இல்லை என்றும், வழக்கு சொத்தில் உரிமையில்லாமல் இவ்வழக்கில் பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் சரியல்ல.

9. நாங்கள் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் உள்ளோம் என்று வழக்கிற்காக பொய்யாக நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆதியில் இவ்வழக்கு சொத்தானது அப்துல்லாபாஷாவின் தகப்பனார் அஜீஸ்சாகிப் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அஜீஸ்சாகிப்பின் வாரிசுகளில் ஒருவர் தான் இவ்வழக்கின் பிரதிவாதி என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தானது அப்துல்லாபாஷாவிற்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்தானது அஜீஸ்சாகிப்பின் மற்ற வாரிசுகளுடைய சுவாதீன அனுபவத்தில் இருந்த சொத்து என்றால் சரியல்ல.

10. பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்து வருவதால் தான் அவர் பெயரில் வழக்கு சொத்திற்கு பட்டாவை வருவாய்துறையினரால் வழங்கப்பட்டுள்ளது என்றால் வாங்கியுள்ளார். வருவாய்த்துறையினர் பொதுவாக சுவாதீனத்தில் யார் உள்ளார்களோ அவர்களுக்குத்தான் பட்டா வழங்குவார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் இதுநாள்வரையிலும் பிரதிவாதி தான் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் இருந்ததே இல்லை என்றும், வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை தவறாக கோரியுள்ளோம் என்றால் சரியல்ல.

11. எனவே நாங்கள் தாக்கல செய்த இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும், பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 909/2009-ன் படி பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகவேண்டும் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ6 மற்றும் 7 ஆகிய மனுக்களுக்கு இதுநாள்வரை எந்த ஒரு தீர்வும் வருவாய்த்துறையினரால் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் நாங்கள் பொய்யான சங்கதிகளை மனுவில் குறிப்பிட்டுள்ளதால் தான் எந்த தீர்வும் அந்த மனுக்களுக்கு வழங்கப்படவில்லை என்றால் இவ்வழக்கு நிலுவையில் உள்ளதால் தான் எந்த தீர்வும் வழங்கப்படவில்லை.

12. வா.சா.ஆ 6 மற்றும் 7 ஆகியவை 2005ம் ஆண்டு கொடுக்கப்பட்ட நிலையில் இவ்வழக்கை நாங்கள் 2008-ல் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி இடைப்பட்ட 3 ஆண்டு காலத்திற்குள்ளும் எந்த தீர்வும் வருவாய்த்துறையினரால் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த 3 ஆண்டு காலத்திற்குள் நாங்கள் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்திருந்தோமா என்றால் இல்லை. இவ்வழக்கில் நாங்கள் கோரியுள்ள பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.